# கள்ளக்குறிச்சி நகராட்சி

2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை.. திரு என்.குமரன், B.Sc.,
தனி அலுவலர் / ஆணையாளர்

## பொருள் எண் – 01

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி கே.பொன்னி என்பவர் தனது குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு திருவண்ணாமலை நகராட்சியில் தூய்மை பணியாளர் பணியிடத்திற்கு பணியிட மாறுதல் வழங்க கோரி கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தன்விருப்பத்தின் பேரில் மாறுதல் கோரியுள்ளதையும், அன்னாரது குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டும் திருவண்ணாமலை நகராட்சிக்கு பணி மாற்றத்தில் செல்ல மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். **2575/ 2020 / சி1**)

## பொருள் எண் – 02

கள்ளக்குறிச்சி நகராட்சி 2019ஆம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று சான்று மத்திய அரசின் நகர்ப்புறம் மற்றும் வீட்டுவசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இம்மாநகரில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது திறந்தவெளி கழிப்பிடங்களற்ற (ODF+) என அறிவிக்கவும், இது சம்மந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் 15 தினங்களுக்குள் தெரிவிக்க தினசரி நாளிதழில் அறிவிப்பு கடந்த 30.10.2020 அன்று தினமலர் மற்றும் தினத்தந்தி ஆகிய தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. தற்போது எந்தவித ஆட்சபணைகளையும் பொது மக்களிடமிருந்து பெறப்படாத நிலையில் ODF+ விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒரு நபரிடமிருந்து மட்டுமே ஆட்சேபணை மனு வரப்பெற்றுள்ளது. அம்மனு உண்மைதன்மையற்ற நிலையில் உள்ளதால் இம்மனுவினை நிராகரித்து முன்மொழிவு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். **2402/ 2020 / எச்1**)

தனி அலுவலர்
கள்ளக்குறிச்சி நகராட்சி

# கள்ளக்குறிச்சி நகராட்சி

2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திரு என்.குமரன், B.Sc.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## பொருள் எண் – 01

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண் TN 15 Y 6671 கீழ்க்கண்ட பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டியுள்ளதாக அலுவலக ஈப்பு ஓட்டுநர் கடிதம் கொடுத்துள்ளார். பட்டியலில் கண்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினமான ரூபாய் ஒரு இலட்சத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

1. ஆயில் சர்வீஸ்
2. ஏ.சி கூலிங் கெப்பாசிட்டி செக்கப்
3. 4 வீல் பிரேக் செக்அப்
4. முன்பக்க பம்பர் டிங்கரிங் வேலை
5. முன்பக்க நிக்கல் பம்பர் டிங்கரிங் வேலை
6. வீல் ஆர்ச் 2 டிங்கரிங் ஒர்க்ஸ்
7. மற்றும் இதர பழுதுகள் அனைத்தும்

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட பணிமனையான M/s SKS Automobiles, Salem என்ற நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. இதற்காகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2562/ 2020 / இ1 )**

## பொருள் எண் – 02

கள்ளக்குறிச்சி நகராட்சியில் இரவுக்காவலராக பணிபுரிந்து கடந்த 13.08.2020ஆம் தேதியன்று பணியின்போது காலமான திரு எம்.ஏசு என்பவர் கடனாக ரூ.3.00 இலட்சம் திரு அசோக்ராஜ் (எ) ஜார்ஜ்,கள்ளக்குறிச்சி என்பவரிடம் பெற்றிருந்ததாகவும், அன்னார் காலமானதை தொடர்ந்து மேற்படி கடனை காலமான திரு எம்.ஏசு என்பவரின் குடும்பத்தினர் கடன் தொகையினை செலுத்த வேண்டும் எனவும் கள்ளக்குறிச்சி டி.மு./ சார்பு நீதி மன்றத்தில் வழக்கு (வழக்கு எண் O.S.எண் 551/2020) தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் பிரதிவாதிகளாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயககுநர் வேலூர், நகராட்சி ஆணையர், கள்ளக்குறிச்சி, அரசின் சார்பாக மாவட்ட ஆட்சியர், கள்ளக்குறிச்சி ஆகியோரை சேர்த்துள்ளார். நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகும் வழக்கறிஞர் திரு பி.வெங்கடேசன் என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/– வழங்கக்கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொடரப்பட்ட வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்

**( ந.க.எண். 2095/ 2020 / சி1 )**

## பொருள் எண் – 03

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் 11937/2020 நாள் 07.08.2020 ன் படி திருமதி.ஏ.சரண்யா க/பெ வினாயகவிஜயன் என்பவர் கருணை அடிப்படையில் வழங்ககோரி வழக்கு தொடர்ந்தள்ளார் மேற்படி வழக்கில் திரு.எஸ்.அருள்தாஸ் தூய்மை பணியாளர் என்பவர் கடந்த 25.10.2015ல் காலமானதை தொடர்ந்து அன்னாரின் பணியினை கருணை அடிப்படையில் பணியினை வழங்க கோரி வழக்கு தொடர்ந்துள்ளதால் மேற்படி வழக்கில் இந்நகராட்சியின் சார்பில் ஆஜராகும் அரசு வழக்கறிஞர் திரு.லூர்து பவுல் மவுரியா என்பவருக்கு வழக்கு கட்டணமாக ரூ.15000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1798/ 2020 / சி1)**

## பொருள் எண் – 04

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் மேலாளர் அறை, பொதுப்பிரிவில் இயங்கிவரும் குளிர் சாதனப் பெட்டி பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 12.11.2020ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீவெற்றி ஏ.சி.பிரிட்ஜ் சர்வீஸ் சென்டர், கள்ளக்குறிச்சி | 1.New Compressor<br>2.All fitting charge<br>3.Coper silver tube, hose<br>4.Gas charges<br>5.Stablizer<br>6.Breaker point<br>7.Wiring with pipe<br>8.Board ready<br>9.Gas charged<br>10.Labour charge | 20600/– |
| 2 | ஏர்கூல் சர்வீஸ் சென்டர், GH ரோடு, கள்ளக்குறிச்சி | | 20800/– |
| 3 | ராஜா ஏ.சி.சர்வீஸ் சென்டர், கள்ளக்குறிச்சி | | 21400/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற வ.எண் 1இல் ஸ்ரீ வெற்றி ஏ.சி.பிரிட்ஜ் சர்வீஸ் சென்டர், கள்ளக்குறிச்சி என்பவரின் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 2170/2019/டி2)

## பொருள் எண் – 05

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கணினி பயன்பாட்டிற்கு டோனர் விநியோகம் செய்யும் பணிக்கு 12.11.2020இல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | டோனர் மாடல் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | ஆதவ் சொல்லிசன், விழுப்புரம் | 12 A டோனர் 1க்கு<br>28 A டோனர் 1க்கு | ரூ.2900<br>ரூ.4950 |
| 2 | அகல்யா இன்போ டெக், விழுப்புரம் | 12 A டோனர் 1க்கு<br>28 A டோனர் 1க்கு | ரூ.3700<br>ரூ.5900 |
| 3 | ராம்ஜி இன்போசிஸ், விழுப்புரம் | 12 A டோனர் 1க்கு<br>28 A டோனர் 1க்கு | ரூ.3800<br>ரூ.6000 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற வ.எண் 1இல் ஆதவ் சொல்யூசன், விழுப்புரம் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 5420/2019/பி1)

## பொருள் எண் 06

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் நகராட்சிக்குச் சொந்தமாக மொத்தம் 13 திறந்தவெளி கிணறுகள் உள்ளன. மேற்படி கிணறுகளில் மின் மோட்டார் பொருத்தி தினசரி குடிநீர் அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

மேற்படி திறந்வெளி கிணற்றிலுள்ள நீரினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மாதிரி எடுத்து சோதனை அறிக்கை பெறப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தண்ணீர் சோதனை அறிக்கை பெறுவதற்கு ஒரு மாதிரிக்கு ரூ. 1186/– வீதம் 13 திறந்தவெளி கிணறு மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்ட குடிநீர் ஆக மொத்தம் 14 சோதனை அறிக்கை பெறுவதற்கு 14 x 1186 = ரூ. 16604/– செலவீனம் ஏற்படும்.

எனவே, குடிநீர் மாதிரிகளை சோதனை அறிக்கை பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ. 17000/– (ரூபாய் பதினேழாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நேரடியாக வங்கி வரைவோலை மூலம் தொகையின் செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2886 / 2020 / இ1)**

## பொருள் எண் 07

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, மின்னனு முறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை தரவிறக்கம் செய்யவும், Digital Signature Certificate (E-Token)–கள் நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் ஆகியோர்களுக்கு புதியதாக வாங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்படி மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான E-Tokenகள் அரசு பதிவு பெற்ற நிறுவவத்தின் மூலம் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ. 7200/– (ரூபாய் ஏழாயிரத்து இருநூறு மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு பதிவு பெற்ற TATA Consultancyன் நிறுவனத்தின் மூலம் நேரடியாக வாங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2884 / 2020 / இ1)**

## பொருள் எண் 08

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக இருந்து, 2011 முதல் நகராட்சி அலுவலக கட்டிடமாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு வரிவசூல் மையம் நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ளது. மேற்படி வரிவசூல் மையத்தின் மூலம் வசூலிக்கப்படும் தொகையினை பாதுகாப்பாக வைப்பதற்கு வலுவான பாதுகாப்பு அறை (Strong Room) இல்லாமல் உள்ளது. மேலும் மேற்படி வலுவான பாதுகாப்பு அறையினை நகராட்சி அலுவலக கட்டிடத்தின் உட்புறம் புதியதாக கட்டி அதில் பாதுகாப்பு பெட்டகம் (Safty Locker) அமைப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்ததயிராம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2885 / 2020 / இ1)**

## பொருள் எண் 09

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சமுதாய கழிப்பிடங்கள்–27 மற்றும் பொது கழிப்பிடங்கள்–2 எண்ணிக்கையில் உள்ளன. இக்கழிப்பிடங்களை பயன்படுத்தும் பொதுமக்களின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு கழிப்பிடங்களை பராமரிப்பு செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

மேலும், இந்நகராட்சிக்கு ODF, ODF++ மற்றும் 3 Star தரத்திற்காக தரம் உயர்த்தும் நடவடிக்கையில் தூய்மை இந்தியா திட்டத்தின் (Swachh Bharat Mission) மூலம் தல ஆய்வுகள் மேற்கொள்ள வருகைபுரிந்த வண்ணம் உள்ளனர். மேற்படி அலுவலர்கள் கழிப்பிடங்களில் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகளாக மின்சார வசதிகள், தண்ணீர் வசதிகள், கொரானா நோய் தொற்றிலிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு கழிப்பிடங்களில் கைகளை கழுவிட Wash Basinகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேற்கொள்ள தெரிவித்துள்ளனர். மேலும், கழிப்பிடங்களை அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கழிப்பிடங்களில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,00,000/– (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2887 / 2020 / இ1)**

## பொருள் எண் 10

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான துருகம் சாலை மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள 2 எண்ணிக்கை நுன்உரமையத்தில், தினசரி சுமார் 4 மெ.டன் மக்கும் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இந்த நுன்உரமையத்தினை மேம்பாடு செய்திட, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிட். நிறுவனத்தின் மூலம் CER நிதியின் கீழ், Bio Char Unit, Garden Sherdding Machine, Seiver Machine மற்றும் இதர உபகரணங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி உபகரணங்களை துருகம் சாலையில் உள்ள நுன்உரமையத்திற்கு அருகில் பொருத்திட ஏதுவாக, அவ்விடத்தில் Shed அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மேலும், மேற்கண்ட உபகரணங்களை பொருத்துவதற்கு Shed, மின்சார அமைப்புகள் மற்றும் இதர வசதிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9,00,000/– (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2888 / 2020 / இ1)**

## பொருள் எண் 11

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக செயல்பட்டு வந்த கட்டிடத்தில், கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி நகராட்சி முதல் நிலை நகராட்சியாக 2010 முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சி தற்போது விழுப்புரம் மாவட்டத்திலிருந்து தனியாக பிரித்து கள்ளக்குறிச்சி மாவட்டமாக 26.11.2019 முதல் மாவட்ட தலைநகரமாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி மாவட்ட தலைநகரத்தில் செயல்பட்டு வருவதால் அதிக அளவில் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு வருகின்றது. மேற்படி பெறப்படும் மனுவின் மீது உரிய நடவடிக்கைகள் அந்தந்த பிரிவு அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மேலும், இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு போதிய அறைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் இல்லாமல் உள்ளது. எனவே, இந்நகராட்சி அலுவலகத்தினுள்

கூடுதல் அறைகள் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9,75,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2889 / 2020 / இ1)**

## பொருள் எண் 12

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் மற்றும் நகர் மன்ற கூடம் சுமார் 900 ச.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. மேற்படி இக்கட்டிடத்தின் மேற்கூரை மூலம் மழைக்காலங்களில் அதிக அளவில் மழைநீரினை சேகரிக்க இயலும். எனவே, நகராட்சி அலுவலக கட்டிட மேற்கூரையின் மூலம் சேகரமாகும் மழைநீரினை குழாய்கள் மூலமாகவும், அலுவலக வெளிபுறத்தில் சேகரமாகும் மழைநீரினை சிறு வடிகால் மூலமாகவும் இணைத்து, அலுவலக வளாகத்தின் வடகிழக்கு புறம் உள்ள பழைய கிணற்றில் சேமிப்பதால், நீரினை பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தவும், நிலத்தடி நீரின் தன்மையையும் (Water Table) அதிக்கப்படுத்தால். மேலும், மழைநீர் சேகரிப்பு அமைப்பு அரசின் இன்றியமையாத ஒன்றாக கருதப்பட்டு வருகின்றது. எனவே, இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் மழைநீர் சேகரிப்பு அமைத்து இதர பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,50,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயியிம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2890 / 2020 / இ1)**

## பொருள் எண் 13

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக இருந்து, 2010 முதல் நகராட்சி அலுவலக கட்டிடமாக செயல்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்தில் தலைவாயில் (Portico) இல்லாமலும், படிக்கட்டுகள், சாய்தளம் மற்றும் சிறு பூங்கா போன்ற அமைப்புகளால் நகராட்சிக்கு வரும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கொண்டு வரும் வாகனங்களை முறையாக நிறுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும், மழைக்காலங்களில் மழைச்சாரல் அலுவலக உட்புறம் வருகின்றது. இதனால் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி இடற்பாடுகளை களையும் வண்ணம், நகராட்சி அலுவலக கட்டிடத்தினை மேம்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் தலைவாயில் புதியதாக அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,00,000/– (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2891 / 2020 / இ1)**

## பொருள் எண் 14

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக இருந்து, 2010 முதல் நகராட்சி அலுவலக கட்டிடமாக செயல்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்தின் முன்புற நுழைவாயில் சாலையானது தார்சாலையாகவும், மேற்படி சாலை போடப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கும் மேல் ஆவதால், தார்சாலை முற்றிலும் பழுதடைந்துள்ளது. இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும் அமைந்துள்ளது. இதனால் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் நோயாளிகள், கர்ப்பிணிகள் மற்றும் பொதுமக்கள் மேற்படி சாலையினை பயன்படுத்துவதற்கு மிகுந்த சிரமமாக உள்ளது. மேற்படி சாலையானது அலுவலகத்தின் நுழைவு சாலையாக உள்ளதால் மேற்படி சாலையினை மேம்படுத்திட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எனவே, மேற்படி நகராட்சி அலுவலகத்தின் நுழைவு சாலையில் பேவர் பிளாக் சாலையாக அமைத்திட தயார் செய்யப்பட்ட

உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,85,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து என்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2892 / 2020 / இ1 )**

## பொருள் எண் 15

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக இருந்து, 2010 முதல் நகராட்சி அலுவலக கட்டிடமாக செயல்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்தின் முகப்பு பகுதியில் நகராட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வாகனங்கள் நிறுத்துமிடமாக உள்ளது. நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் உள்ள சாலையானது தார்சாலையாகவும், மேற்படி சாலை போடப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கும் மேல் ஆவதால், தார்சாலை முற்றிலும் பழுதடைந்து மழைநீர் வெளியேறாமல் ஆங்காங்கே தேங்கியுள்ளது. இதனால், மழைக்காலங்களில் இந்நகராட்சிக்கு வருகைபுரியும் உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் மழைநீர் தேங்கி உள்ளது.

இந்நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் பேவர் பிளாக் சாலையாக மாற்றி அமைத்து மழைநீர் தேங்கா வண்ணம் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எனவே, நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் பேவர் பிளாக் சாலையாக அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2878 / 2020 / இ1 )**

## பொருள் எண் 16

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக இருந்து, 2010 முதல் நகராட்சி அலுவலக கட்டிடமாக செயல்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சி 2010–லிந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, தற்போது மாவட்ட தலைநகரமாகவும் உள்ளது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிக அளவில் வளர்ச்சி பணிகள் மற்றும் அனைத்து துறை சம்மந்தமான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருவதனால், இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அலுவலக சம்மந்தமான கோப்புகள், பதிவேடுகள் மற்றும் இதர படிவங்கள் வைப்பதற்கு ஏற்ப வசதிகள் இல்லாமல் உள்ளது. எனவே, இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான பீரோ, மேசை, நாற்காலி மற்றும் இதர உபகரணங்கள் வாங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 6,00,000/– (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.

**( ந.க.எண். 2879 / 2020 / இ1 )**

## பொருள் எண் 17

கள்ளக்குறிச்சி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக கள்ளக்குறிச்சி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் (Secondary Storage) இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் (Transporation) செய்து முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று

நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழ் (Self Declaration) பெற வேண்டியுள்ளதால், இது சம்பந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் 15 தினங்களுக்குள் தெரிவிக்க தினசரி நாளிதழில் அறிவிப்பு கடந்த 10.11.2020 அன்று மாலைமலர் தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. தற்போது எந்தவித ஆட்சேபணையும் பொது மக்களிடமிருந்து பெறப்படாத நிலையில் Garbage Free City விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/2243/2020)**

## பொருள் எண் 18

கள்ளக்குறிச்சி நகராட்சி 2019ம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது திறந்தவெளி கழிப்பிடங்களற்ற (ODF+) என அறிவிக்க பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் 15 தினங்களுக்குள் தெரிவிக்க தினத்தந்தி மற்றும் தினமலர் என இரு தினசரி நாளிதழ்களில் அறிவிப்புகள் கடந்த 30.10.2020 அன்று வெளியீடு செய்தமைக்கு கீழ்க்கண்ட விபரப்படி பட்டியல் தொகை பெறப்பட்டுள்ளது. எனவே, கீழ்காணும் விபரப்படி தொகை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகைரூ |
|---|---|---|
| 1 | தினமலர் நாளிதழ்<br>பட்டியல் எண். RRA0099 நாள்.30.10.2020 | ரூ.5040.00 |
| 2 | தினத்தந்தி நாளிதழ்<br>பட்டியல் எண். CDL2021-0005069 நாள்.30.10.2020 | ரூ.6678.00 |

அலுவலக குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2402/2020 /எச்1 )**

## பொருள் எண் 19

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரை 114 எண்கள் சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து குடிநீர் பகிர்மான குழாய்களுக்கும், கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

நகரரட்சி குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மண்டல இயக்குநர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/–(ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2883 / 2020 / இ1 )**

## பொருள் எண் 20

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரை 89 எண்கள் சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து பகிர்மான குழாய்களுக்கும், கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

நகரரட்சி குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மண்டல இயக்குநர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2881 / 2020 / இ1 )**

## பொருள் எண் 21

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரை 105 எண்கள் சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து குடிநீர் பகிர்மான குழாய்களுக்கும், கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

நகரரட்சி குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மண்டல இயக்குநர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2882 / 2020 / இ1 )**

## பொருள் எண் 22

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள TN 32 AV 2277 என்ற வாகனத்தை ஆயில் சர்வீஸ் மற்றும் எலக்ட்ரிக்கல் பணிகள் செய்ய வேண்டி உள்ளதால் மேற்படி வாகனத்தில் உள்ள இதர பழுதுகளையும் நீக்கம் செய்து தர இந்நகராட்சி ஓட்டுநர் கோரியுள்ளதை தொடர்ந்து மேற்படி பணிக்கு உத்தேச செலவினமாக ரூ.25,000/—க்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான SKS automobiles, Salem என்ற நிறுவனத்தில் பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2872 / 2020 / இ1)**

## பொருள் எண் 23

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் **2015—2016**ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட வாகன எண் TN 32 AU 1335 என்ற வாகனம் டம்பர் பின்கள் அகற்றுவதற்காக வாங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து குப்பைகளை சேகரிக்க மின்கல வாகனம் 27 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்படுகிறது. தற்போது டம்பர் பின்கள் வைத்து குப்பைகளை சேகரிக்கும் பணி நடைபெறவில்லை என்பதால் மேற்படி வாகனம் தற்போது பயன்படுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை தினசரி சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு ஏற்ற முறையில் டம்பர் பின் வாகனத்திலிருந்து மினி லாரியாக வகைமாற்றம் செய்துக் கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2875 / 2020 / இ1)**

## பொருள் எண் 24

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் மற்றும் குடிநீர் நிதியில் கடந்த 20.01.2020 அன்று நடைபெறும் ஒப்பந்தப்புள்ளி மலரில் தினசரி விளம்பரம் செய்ய மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை,விழுப்புரம் அவர்களின் வழியாக தினமலர் நாளிதழில் கடந்த 09.01.2020ஆம் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்தமைக்கான கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தினை பார்வைக்கும், அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகைரூ |
|---|---|---|
| 1 | தினமலர் நாளிதழ்<br>பட்டியல் எண். VMG0215 நாள்.09.01.2020 | ரூ.14700.00 |

அலுவலக குறிப்பு:—

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1100/2020 /எச்1 )**

## பொருள் எண் 25

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் தொழில் உரிமகட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்யவேண்டும். அவ்வாறு அனைத்து விதமான வணிக நிறுவனங்களுக்கும் தொழில் உரிம கட்டணம் நிர்ணயம் செய்ய கள்ளக்குறிச்சி பேரூராட்சியாக இருந்த காலத்திலேயே தீர்மான எண்.72 நாள்:-21.11.2000 ல் அனுமதி பெறப்பட்டு, விழுப்புரம் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டு இது நாளது வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இது குறித்து வருடா வருடம் தணிக்கை அறிக்கையில் இப்பொருள் தொடர்பாக தொழில் உரிமகட்டணம் செய்த ஆண்டியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழில் உரிம கட்டணம் நிர்ணயம் செய்து அரசிதழில் வெளியிட்டு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளளப்பட வேண்டும் என தணிக்கை பத்திகள் நிலுவைகள் உள்ளது. தற்போது கள்ளக்குறிச்சி பேரூராட்சி என்ற நிலையிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், நகரப்பகுதியில் உள்ள வணிகநிறுவனங்களுக்கு தொழில் உரிம கட்டணம் பேரூராட்சியாக செயல்பட்ட போது இருபது ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே, அனைத்து விதமான வணிக நிறுவனங்களுக்கும் தொழில் உரிம கட்டணம் நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.எச்1/ 2206/2019)**

## பொருள் எண் 26

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் தினசரி உருவாகும் குப்பைகளை தரம்பிரித்து எடுத்து செல்ல சிறிய இலகுரக வாகனங்கள் (LCV) 5 எண்ணிக்கைகள்(1.TN15S7421, 2.TN15S7454, 3.TN15P3121, 4.TN15P3133, 5.TN15P3168) ஆகிய வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் , மேற்கண்ட வாகனங்களுக்கு அனைத்து சக்கரங்களும் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால் நகரப்பகுதியில் இரண்டாம் நிலை சேகரம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் மேற்கண்ட வாகனங்களுக்கு சக்கரங்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசரஅவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்

3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/ 2245/2020)**

## பொருள் எண் 27

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 748/08/கு.வ.2 நாள் 21.09.2009ல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கான கட்டணத்தில் ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்வு செய்து குடிநீர் இணைப்பு கட்டணம் நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் இணைப்பு கட்டணம் 2019–2020 ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்டதிலிருந்து 5 சதவீதம் உயர்த்தி 2020–2021 ஆண்டிற்கு 01.04.2020 முதல் குடிநீர் இணைப்பு கட்டணம் கீழ்க்கண்டவாறு வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணங்கள் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Details | Earthern road | | WBM Road | | B.T.Road | | CC.Road | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 0.00 – 30.00 M | 30.00 – 90.00 M | 0.00 – 30.00 M | 30.00 – 90.00 M | 0.00 – 30.00 M | 30.00 – 90.00 M | 0.00 – 30.00 M | 30.00 – 90.00 M |
| 1 | Deposit | 5000 | 5000 | 5000 | 5000 | 5000 | 5000 | 5000 | 5000 |
| 2 | Road maintain charges | 1050 | 1470 | 1890 | 2940 | 3990 | 5040 | 4570 | 5620 |
| 3 | Supervision charges | 1470 | 1790 | 1530 | 3150 | 1740 | 3310 | 1840 | 3470 |
| 4 | Connection charges | 320 | 320 | 320 | 320 | 320 | 320 | 320 | 320 |
| | **Total** | **7840** | **8580** | **8740** | **11410** | **11050** | **13670** | **11730** | **14410** |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள பின்பற்றத்தக்க வழிமுறைகளை பின்பற்றி ஒவ்வோர் ஆண்டும் ஏற்கனவே உள்ள தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை மற்றும் கட்டணங்களை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 777 / 2018 )

**தனி அலுவலர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**